TD

ரெடி, உங்களுடன் முன்னே செல்வதற்கு.

# TD சர்வதேச மாணவர் GIC திட்டத்தை அறிமுகப்படுத்துகிறோம்:

சர்வதேச மாணவர்கள் தங்களது நாட்டில் இருந்துகொண்டே, கனடாவில் படிப்பதற்கான அனுமதி பெறுவதற்கான வழிகாட்டுதல்களைப் பின்பற்றித் தகுதிபெறுவதற்கு உதவும் திட்டம்.





# கனடாவில உஙகள நிதிப பயணம இஙகே தொடஙகுகிறது!

புதிய நாட்டிறகு மாறுவதில உஙகளுககு இருககககூடிய சவாலகள எஙகளுககுப புரிகிறது. கனடாவில உஙகள புதிய வாழககையைத தொடஙகுமபோது, உஙகளுககு உடனடியாகத தேவைபபடுகினற மறறும எதிர்காலததில தேவைபபடுகினற வஙகிச சேவை சார்நத தேவைகளுககாக உஙகளுககு உதவிட உறுதுணையாக நாஙகள இருககிறோம.
**கனடா முழுவதும உளள 1,085 கிளைகள மற்றும் 3000+ ATM மையஙகளில உஙகளுககு சேவையளிகககக காததிருககிறோம.**

# TD சர்வதேச மாணவர் GIC திட்ட வழிகாட்டி:

TD சர்வதேச மாணவர் GIC திட்டம்: 4

வநது சேர்வதறகு முனபான விணணபபச செயலமுறை 6

நீஙகள கனடா வநததும எஙகளை வநது பாருஙகள 9

GIC பேமெணட் அட்டவணை 10

நீஙகள தாமதிததால: 10

TD சர்வதேச மாணவர் GIC திட்டததில உஙகள பஙகேறபை ரததுசெயய விருமபினால: 11

விணணபபததை நிறைவு செயதலின முககியமான படிகள 12

அடிககடி கேட்கபபடும கேளவிகள 16

# TD சர்வதேச மாணவர் GIC திட்டம்:

**TD சர்வதேச மாணவர் GIC திட்டமானது**, கனடிய அரசாங்கத்தின் **ஸ்டூடண்ட் டைரக்ட் ஸ்ட்ரீம் திட்டத்திற்குத்** (“SDS திட்டம்”) தகுதிபெறுகின்ற மாணவர்களுக்கு உதவுவதற்கான ஒரு திட்டமாகும்.

கனடாவில் படிப்பதற்கான கனடிய அரசாங்கத்தின் அனுமதி வழிகாட்டுதல்களைப் பூர்த்திசெய்ய விரும்பும் சர்வதேச மாணவர்கள், கனடா வருவதற்கு முன்பே **TD மாணவர் காசோலைக் கணக்கைத்** தொடங்கி தங்களது **உத்தரவாதமுள்ள முதலீட்டுச் சான்றிதழில் (GIC)** பணம் போடுவதன் மூலம் அரசின் வழிகாட்டுதல்களைப் பூர்த்தி செய்யலாம். கனடாவில் உள்ள மேல்நிலைக் கல்வி நிறுவனத்திடமிருந்து ஒப்புதல் கடிதம் பெற்றிருக்க வேண்டும், **SDS திட்டத்திற்குத்** தகுதிபெறுகின்ற நாட்டில் வசிப்பவராக இருக்க வேண்டும் என்பது போன்ற நிபந்தனைகள் உட்பட, நீங்கள் **SDS திட்டத்திற்குத்** தகுதிபெற்றவர் எனில் நீங்கள் TD சர்வதேச மாணவர் GIC திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.



# நீஙகள கனடா வருவதற்கு முனபு இவற்றைச் செயயலாம:

- கனடாவில உஙகள தினசரி வஙகிச சேவைத தேவைகளுககாக ஒரு காசோலைக கணககைத தொடஙகலாம. நீஙகள கனடாவிறகு வநது, ஒரு TD கனடா ட்ரஸட் வஙகிக கிளையில, அததியாவசியமான படிகளை நிறைவு செயத பிறகே அநதக கணககைப பயனபடுததத தொடஙக முடியும.
- உஙகள GIC ககு நிதியளிதது, கனடாவில நீஙகள வசிபபதறகான செலவுகளைச சமாளிபபதறகாக ஒரு முறை சர்வதேச வயர் டிரானஸஃபர் செயயலாம, மேலும
- கனடாவில படிபபதறகு அனுமதி பெறுவதறகான வழிகாட்டுதலகளைப பூர்ததிசெயவதறகாக GIC வாஙகலாம.



ஒரு **TD மாணவர் காசோலைக் கணக்கும், ஒரு GIC முதலீடும், TD சர்வதேச மாணவர் GIC திட்டத்தில்** உள்ளடங்கும். நீங்கள் கனடாவில் உள்ள ஒரு **TD கனடா ட்ரஸ்ட் வங்கிக் கிளைக்கு** வந்து, எங்கள் திட்டத்திற்கான தேவைகளை நிறைவு செய்த பிறகு, GIC-இல் உள்ள உங்கள் பணத்தின் ஒரு பகுதி 12 மாத காலத்துக்கு, உங்கள் **TD மாணவர் காசோலைக் கணக்கிற்கு** அனுப்பப்படும்.

உங்கள் நாட்டைவிட்டு கனடாவிற்கு வந்து சேர்வது பற்றித் திட்டமிடுவதில் பலப்பல வேலைகள் இருக்கும். கனடாவிற்கான உங்கள் பயணத்தை இனிதே முன்னெடுத்துச் செல்ல உதவுவதற்காகவே TD உள்ளது.

## கீழேயுள்ள கட்டணமற்ற எண்களில் எங்களைத் தொடர்புகொள்ளலாம்:

**சீனாவில் இருந்து அழைக்க:** 1-855-537-5355
**இந்தியா/பிலிப்பைன்ஸ்/செனேகல்/பாகிஸ்தான்/மொராக்கோ/வியட்னாம்/ஆன்டிகுவா அண்ட் பர்புடா/பிரேசில்/கொலம்பியா, கோஸ்டா ரிகா/பெரு/செயின்ட் வின்சென்ட் அண்ட் தி கிரெனாடின்ஸ்/ட்ரினிடாட் அண்ட் டொபாகோ ஆகிய பகுதிகளில் இருந்து அழைக்க:** 1-416-351-0613 (கால் கலெக்ட்)

# வந்து சேர்வதற்கு முன்பான விண்ணப்பச் செயல்முறை



## உங்கள் TD மாணவர் காசோலைக் கணக்கு மற்றும் TD சர்வதேச மாணவர் GIC-ஐத் தொடங்குவது எளிதானது மற்றும் பாதுகாப்பானது!

முழுவதும் பூர்த்திசெய்யப்பட்ட உங்கள் விண்ணப்பப் படிவத்தையும், சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் ஆன்லைனில் நீங்கள் சமர்ப்பித்ததும், உங்கள் விண்ணப்பத்தை நாங்கள் பரிசீலிப்போம். உங்கள் விண்ணப்பப் படிவமும், சம்பந்தப்பட்ட ஆவணங்களும் சரியாக உள்ளது என்று நாங்கள் தீர்மானித்ததும், அடுத்த **2 - 5 வணிக தினங்களுக்குள்** பாதுகாப்பான மின்னஞ்சல் மூலம் **வரவேற்புத் தொகுப்பை** உங்களுக்கு அனுப்புவோம். அதில் உங்கள் கணக்கு விவரங்களும், பதிவு செய்தல் **சான்றுக்கான TD போர்ட்டலின் இணைப்பும்** இருக்கும்.. நீங்கள் கணக்கு விவரங்களைப் பெற்றதும், கனடாவில் உள்ள தகுந்த மேல்நிலைக் கல்வி நிறுவனத்திடமிருந்து பெற்ற உங்களுக்கான ஒப்புதல் கடிதத்தை, பதிவு செய்ததற்கான ஆதாரத்தை சமர்ப்பிப்பதற்கான TD போர்ட்டலில் நீங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டியது கட்டாயம். ஒப்புதல் கடிதத்தை சமர்ப்பித்த பிறகு, உங்கள் **TD மாணவர் காசோலைக் கணக்கில்** பணம் போட, **வரவேற்புத் தொகுப்பில்** உள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.



**உங்கள் ஒப்புதல் கடிதத்தைப் பதிவேற்ற customercollaboration.TD.com/student எனும் இணையப் பக்கத்திற்குச் செல்லவும்**





அதன்பிறகு, உங்கள் **TD மாணவர் காசோலைக் கணக்கில்** பணம் போட நீங்கள் சர்வதேச வயர் டிரான்ஸ்ஃபர் செய்ய வேண்டும். உங்கள் TD மாணவர் காசோலைக் கணக்கில், உள்வரும் வயர் பேமண்ட் கட்டணம் உள்பட குறைந்தபட்சம் CAD$10,000 தொகையும், அதிகபட்சம் CAD$25,000 தொகையும் சர்வதேச வயர் ட்ரான்ஸ்பர் மூலம் பணம் செலுத்துவது அனுமதிக்கப்படும். உங்களுக்கு வழங்கப்பட்ட **About our Account and Related Services (எங்களது கணக்கு மற்றும் தொடர்பான சேவைகள் பற்றி)** என்பதில் உள்ள **TD சேவைக் கட்டண அட்டவணையில்**, வயர் பேமெண்ட்டைப் பெறுவதற்கான கட்டண விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சர்வதேச வயர் டிரான்ஸ்ஃபர் TD வங்கியை வந்து சேர தோராயமாக **5 அல்லது அதற்கு அதிகமான வேலை நாட்கள்** ஆகலாம் என்பதை மனதில் வைத்து, அதற்கேற்ப உங்கள் டிரான்ஸ்ஃபரைத் திட்டமிட வேண்டும். எத்தனை நாட்கள் ஆகும் என்பதை இன்னும் துல்லியமாகத் தெரிந்துகொள்ள பணம் செலுத்துகின்ற உங்கள் உள்ளூர் வங்கியிடம் விசாரிக்கவும்.

வெளிநாட்டு கரன்சியில் இருந்து கனடிய டாலர்களாக மாற்ற வேண்டிய நிதிகள் பற்றிய கூடுதல் தகவலுக்கு **நிதிச் சேவை விதிமுறைகள்,** 2.10 வெளிநாட்டு கரன்சியை நாங்கள் எப்படிக் கையாளுகின்றோம்? என்ற பிரிவைப் பார்க்கவும்.

உங்கள் **TD மாணவர் காசோலைக் கணக்கு** தொடர்ந்து இயக்கத்தில் இருக்க வேண்டுமானால், கணக்கைத் தொடங்கிய தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் ஒரு சர்வதேச வயர் டிரான்ஸ்ஃபர் மூலம் அதில் பணம் செலுத்த வேண்டியது கட்டாயம். கணக்கைத் தொடங்கிய தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் பணம் செலுத்தப்படாமல் இருக்கும் கணக்கு தானாகவே மூடப்பட்டுவிடும்.

## உங்களுக்கான சர்வதேச வயர் டிரான்ஸ்ஃபரை TD வங்கி பெற்றவுடன், ஒரு TD சர்வதேச மாணவர் GIC-இல் CAD $10,000 முதலீடு செய்யப்படும். CAD $10,000-க்கு மேல் பணம் இருந்தால் அந்தக் கூடுதல் தொகை உங்கள் TD மாணவர் காசோலைக் கணக்கிலேயே இருக்கும்.

**GIC முதலீட்டு விவரங்கள் எனும் ஆவணத்தில்** விவரிக்கப்பட்டுள்ளபடி, GIC வாங்குவதற்கு நீங்கள் ஒப்புதல் அளித்த பிறகு, **TD சர்வதேச மாணவர் GIC** வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து, **முதலீட்டை உறுதிப்படுத்தும்** ஆவணம் ஒன்றைப் பெறுவீர்கள். அதில் அசல் தொகை **(CAD $10,000)**, வட்டி வீதம், வழங்கப்பட்ட தேதி, கால அளவு, முதிர்வுத் தேதி உள்ளிட்ட GIC விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

பினவரும ஏதாவது ஒரு சூழலில, உஙகளிடமிருநது நாஙகள பெறற சர்வதேச வயர் டிரானஸஃபர் எநதக கணககில இருநது வநததோ அதே கணககிறகுத திருபபியனுபபபபடும:

- நாஙகள பெறற முதல, ஒருமுறை மட்டுமான சர்வதேச வயர் டிரானஸஃபரின தொகை **CAD $ 10,000** ககும குறைவாகவோ **CAD$ 25,000**-ககும அதிகமாகவோ இருநதால; அலலது
- நீஙகள கனடாவிறகு வநது, மேலே குறிபபிடபபட்டுளள இநதத திட்டததிறகான தேவைகளை நிறைவுசெயயும முனபு, முதலில நீஙகள செயயும **CAD $10,000** முதல **CAD $25,000** வரையான சர்வதேச வயர் டிரானஸஃபருககுப பிறகு அலலது கூடுதலாக, உஙகள TD மாணவர் காசோலைக கணககிறகு பணம அனுபபபபட்டால அலலது டெபாசிட் செயயபபட்டால.

**TD மாணவர் காசோலைக் கணக்கு** தொடங்கப்பட்டு, **TD சர்வதேச மாணவர்** GIC-இல் பணம் போட்டுவிட்டால், அதன் பிறகு **நீங்கள் TD கனடா ட்ரஸ்ட் வங்கிக் கிளை** ஒன்றில் திட்டத்திற்கான எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்யும் வரை அவை தொடர்பாக எந்தப் பரிவர்த்தனையும் அனுமதிக்கப்படாது.

படிப்பதற்கான அனுமதியைப் பெற்று நீங்கள் கனடாவிற்கு வந்ததும், நீங்கள் விரும்புகின்ற ஒரு **TD Canada Trust கிளைக்கு** வந்து, அடையாளங்களைச் சரிபார்த்தும், ஆவணங்களில் கையெழுத்திட்டும் உங்கள் **TD மாணவர் காசோலைக் கணக்கு** மற்றும் உங்கள் **TD சர்வதேச மாணவர் GIC** ஆகியவற்றை செயல்தூண்ட வேண்டும்.

**TD பாதுகாப்பான மின்னஞ்சல்:** எங்களிடமிருந்து முதல் முறை TD பாதுகாப்பான மின்னஞ்சலைப் பெற்றதும், பாதுகாப்பான மின்னஞ்சல் சேவைக்கு நீங்கள் பதிவுபெற வேண்டும். இந்த மின்னஞ்சல் 14 நாட்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

# நீங்கள் கனடா வந்ததும் எங்களை வந்து பாருங்கள்



உங்கள் **TD மாணவர் காசோலைக் கணக்கைத்** தொடங்கிய பிறகு, கனடாவிற்கு வந்து ஒரு **TD கனடா ட்ரஸ்ட் வங்கிக் கிளைக்க** வருகை தந்து அடையாளச் சரிபார்ப்புச் செயல்முறையை நிறைவு செய்து உங்கள் **TD மாணவர் காசோலைக் கணக்கையும்** உங்கள் **TD GIC கணக்கையும்** செயல்தூண்டுவதற்கு **உங்களுக்கு 365 நாட்கள்** அவகாசம் உள்ளது.

**வருமபோது இஃறறை க கொணடு வரவும:**

செலலுபடியான உஙகள அயலநாட்டு பாஸபோர்ட், கனடிய மேலநிலைக கலவி நிறுவனததிடம பதிவு பெறறதறகான ஆதாரம (அலலது மாணவர் ID கார்டு) மறறும படிபபுககான அனுமதி (அதாவது IMM 1208).

கியூபெக் மாகாணத்தில் படிக்கும் மாணவர்களுக்கு, மேலே குறிப்பிட்ட ஆவணங்களுடன் கூடுதலாக **கியூபெக் ஒப்புதல் சான்றிதழும் (CAQ)** அவசியம். உங்களுக்கு **வரி செலுத்துநர் அடையாள எண் (TIN)** இருந்து, முன்பே அதை நீங்கள் வழங்காமல் இருந்தால், வரும்போது அதை வழங்க வேண்டியது கட்டாயம். இந்தத் தகவலை எங்கள் பதிவுகளில் வைத்திருக்காவிட்டால், கனடிய வருவாய் ஏஜென்சி உங்களுக்கு அபராதங்கள் விதிக்கலாம்.

உங்கள் TD மாணவர் காசோலைக் கணக்கைத் தொடங்கி **365 நாட்களுக்குள்** எங்கள் வங்கிக் கிளைகளில் ஒன்றுக்கு வருகைதராமல்இருந்து இந்தப் படிகளை நீங்கள் நிறைவு செய்யாவிட்டால், உங்கள் **TD மாணவர் காசோலைக் கணக்கு** மற்றும் உங்கள் **TD சர்வதேச மாணவர் GIC** மூடப்படுவதுடன், மேலே விவரிக்கப்பட்ட வயர் டிரான்ஸ்ஃபரை நீங்கள் எந்தக் கணக்கில் இருந்து அனுப்பினீர்களோ அதே கணக்கிற்கு அசலும், அதற்குப் பெற்ற வட்டியும் சேர்த்துத் திருப்பியனுப்பப்படும்.

# GIC பேமெண்ட் அட்டவணை

**TD சர்வதேச GIC** என்பது திட்டத்தின் விதிமுறைகளுக்கும், **TD சர்வதேச மாணவர் GIC திட்ட விண்ணப்பப்** படிவத்தில் விவரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் உட்பட்டது. கீழே உள்ள **GIC பேமெண்ட் அட்டவணையின்படி** மட்டுமே இந்த GIC-ஐ ரிடீம் செய்ய முடியும். நீங்கள் TD கனடா ட்ரஸ்ட் வங்கிக் கிளைக்கு வந்து, **TD சர்வதேச மாணவர் GIC திட்டத்தில்** பங்கேற்பதற்கான நிபந்தனைகள் அனைத்தையும் பூர்த்திசெய்த பிறகு, உங்கள் GIC-இல் இருந்து **CAD $2,000 தொகையும் அதற்குப் பெற்ற வட்டியும்** விடுவிக்கப்பட்டு உங்கள் **TD மாணவர் காசோலைக் கணக்கில்** டெபாசிட் செய்யப்படும். மீதமுள்ள **அசல் CAD $8,000**, பத்து மாத சம தவணைகளாக உங்கள் GICஇலிருந்து விடுவிக்கப்பட்டு மாதம் **ஒன்றுக்கு CAD $800 தொகையும்**, **அதோடு பெற்ற வட்டித்** தொகையும் சேர்த்து தொடர்ந்து, அடுத்துவரும் ஒவ்வொரு மாதமும் முதல் வணிக நாளில் உங்கள் TD **மாணவர் காசோலைக் கணக்கில்** டெபாசிட் செய்யப்படும்.

| GIC பேமெண்ட் அட்டவணை | GIC பேமெண்ட் தொகை | மீதமுள்ள GIC அசல |
|---|---|---|
| TD வங்கிக் கிளைக்கு வருகை | $2000 + வட்டி | $8000 |
| 2வது மாதத்தின் 1வது வணிக தினம் | $800 + வட்டி | $7200 |
| 3வது மாதத்தின் 1வது வணிக தினம் | $800 + வட்டி | $6400 |
| 4வது மாதத்தின் 1வது வணிக தினம் | $800 + வட்டி | $5600 |
| 5வது மாதத்தின் 1வது வணிக தினம் | $800 + வட்டி | $4800 |
| 6வது மாதத்தின் 1வது வணிக தினம் | $800 + வட்டி | $4000 |
| 7வது மாதத்தின் 1வது வணிக தினம் | $800 + வட்டி | $3200 |
| 8வது மாதத்தின் 1வது வணிக தினம் | $800 + வட்டி | $2400 |
| 9வது மாதத்தின் 1வது வணிக தினம் | $800 + வட்டி | $1600 |
| 10வது மாதத்தின் 1வது வணிக தினம் | $800 + வட்டி | $800 |
| 11வது மாதத்தின் 1வது வணிக தினம் | $800 + வட்டி | $0 |

# நீங்கள் தாமதித்தால்:

உங்கள் **TD மாணவர் காசோலைக் கணக்கைத்** தொடங்கி 365 நாட்களுக்குள் எங்கள் வங்கிக் கிளை ஒன்றிற்கு வருகை தந்து, மேலே குறிப்பிட்ட படிகளை நீங்கள் நிறைவு செய்யாவிட்டால், உங்கள் **TD மாணவர் காசோலைக் கணக்கு** மற்றும் உங்கள் **TD சர்வதேச மாணவர் GIC** மூடப்படும்.

# TD சர்வதேச மாணவர் GIC திட்டத்தில் உங்கள் பங்கேற்பை ரத்துசெய்ய விரும்பினால்:

கனடாவிற்கு வந்து சேரும் முன்பு, **TD சர்வதேச மாணவர் GIC திட்டத்தில்** உங்கள் பங்கேற்பை ரத்துசெய்ய விரும்பினால், கீழே கொடுக்கப்பட்டுள்ள எங்கள் கட்டணமற்ற எண்களை அழைக்கவும். பங்கேற்பை ரத்துசெய்யும்போது **TD மாணவர் காசோலைக் கணக்கு**, **TD சர்வதேச மாணவர் GIC** ஆகிய இரண்டும் மூடப்படும்.

**கவனத்திற்கு**: TD கனடா ட்ரஸ்ட் வங்கிக் கிளைக்கு வருகை தந்து மேலே குறிப்பிட்ட படிகளை நிறைவுசெய்த பிறகு, திட்டத்தில் பங்கேற்பை ரத்துசெய்ய அனுமதியில்லை.

மேலே குறிப்பிட்ட இரண்டு சூழ்நிலைகளிலும், மேலே விவரிக்கப்பட்ட வயர் டிரான்ஸ்ஃபரை அனுப்ப நீங்கள் பயன்படுத்திய அதே கணக்கிற்கு, இந்தத் தொகைகளின் அசல் மற்றும் அதற்குப் பெற்ற வட்டி (இருந்தால்) இரண்டையும் சேர்த்து நாங்கள் திருப்பி அனுப்பிவிடுவோம். அதோடு உங்கள் TD மாணவர் காசோலைக் கணக்கு மற்றும் TD சர்வதேச மாணவர் GIC ஆகிய இரண்டும் மூடப்பட்டுவிடும்.

மேலும், ஏதேனும் காரணத்திற்காக (இங்கு விவரிக்கப்பட்ட ஏதேனும் சூழல்கள் உட்பட, ஆனால் அவை மட்டுமே அல்ல) உங்களுக்கு நாங்கள் சர்வதேச வயர் டிரான்ஸ்ஃபர் மூலம் பணத்தைத் திருப்பியனுப்ப வேண்டும் எனில், உங்களுக்கு வழங்கப்பட்ட **About our Account and Related Services (எங்களது கணக்கு மற்றும் தொடர்பான சேவைகள் பற்றி)**என்பதில் உள்ள TD சேவைக் கட்டண அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, சர்வதேச அளவில் TD Canada Trust அல்லாத கணக்கிற்கு வயர் டிரான்ஸ்ஃபர் செய்வதற்காக, திரும்பப்பெற முடியாத கட்டணம் உங்களுக்கு விதிக்கப்படும். உங்களுக்குத் திருப்பியளிக்கப்படும் பணத்திலிருந்து இந்தக் கட்டணம் பிடிக்கப்படும். பணத்தை அனுப்புவதில் சம்பந்தப்பட்டிருக்கும் பிற வங்கிகள் அல்லது நிதி நிறுவனம், பணத்தைப் பெறுபவரிடம் கூடுதல் கட்டணங்களை விதிக்கலாம்.

கனடிய டாலரில் இருந்து வெளிநாட்டு கரன்சிக்கு மாற்ற வேண்டிய பணம் பற்றிய கூடுதல் தகவலுக்கு, **நிதிச் சேவை விதிமுறைகள்**, 2.10 வெளிநாட்டு கரன்சியை நாங்கள் எப்படிக் கையாளுகின்றோம்? என்ற பிரிவைப் பார்க்கவும்.

## TD சர்வதேச மாணவர் GIC திட்டத்திற்கான கட்டணமற்ற தொலைபேசி எண்:

**சீனாவில் இருந்து அழைக்க:** 1-855-537-5355
**இந்தியா/பிலிப்பைன்ஸ்/செனேகல்/பாகிஸ்தான்/மொராக்கோ/வியட்னாம்/ஆன்டிகுவா அண்ட் பர்புடா/பிரேசில்/கொலம்பியா, கோஸ்டா ரிகா/பெரு/செயின்ட் வின்செண்ட் அண்ட் தி கிரெநாடின்ஸ்/ட்ரினிடாட் அண்ட் டொபாகோ ஆகிய பகுதிகளில் இருந்து அழைக்க:**
1-416-351-0613 (கலெக்ட் கால்)

# விண்ணப்பத்தை நிறைவு செய்தலின் முக்கியமான படிகள்



## 1 விண்ணப்பப் படிவத்தைக் கோருதல்:

**TD சர்வதேச மாணவர் GIC திட்டத்தில்** பங்கேற்பதற்கான விண்ணப்பப் படிவத்தைக் கோர நீங்கள் **<<LINK>>** பூர்த்தி செய்யலாம். கனடிய **அரசாங்கத்தின் SDS திட்டத்தின் மூலம்** கனடாவில் படிப்பதற்கான அனுமதி விண்ணப்பப் படிவத்திற்குத் தேவையான **TD சர்வதேச மாணவர்** GICஒன்றை வாங்குவதற்குப் பயன்படுத்தப்படும் நிதியைப் பெறுவதற்கு **TD மாணவர் காசோலைக் கணக்கைத்** தொடங்க இது அவசியம்.

## 2 உங்கள் விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்தல்:

உங்கள் கோரிக்கையை நாங்கள் பெற்றதும் **TD மின்னணுக் கையொப்ப இணையதளத்திற் கான இணைப்பை** மின்னஞ்சலில் உங்களுக்கு அனுப்புவோம். இந்த மின்னஞ்சல் 'தேவையற்றவை' அல்லது 'ஸ்பேம்' எனக் குறிக்கப்பட்டு அதற்குரிய கோப்புறைகளுக்குச் சென்றுவிட்டதா என்றும் பார்க்கத் தவற வேண்டாம். TD அனுப்பும் மின்னஞ்சல் **TD.eSignNoReplyAccount@td.com** என்ற முகவரியிலிருந்து வரும்.

விண்ணப்பப் படிவத்தையும் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் நன்கு படித்துப் பார்த்து, பிறகு பூர்த்தி செய்து தேவையான ஆவணங்களில் மின்னணு முறையில் கையொப்பமிடவும். விண்ணப்பப் படிவத்தையும், சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் ஆன்லைனில் சமர்ப்பித்ததும், அவை முழுமையாகவும் சரியாகவும் உள்ளது என்று நாங்கள் தீர்மானித்ததும், உங்கள் விண்ணப்பப் படிவத்தை நாங்கள் பரிசீலித்து, அடுத்த **2 - 5 வணிக தினங்களுக்குள்** பாதுகாப்பான மின்னஞ்சல் மூலம் **வரவேற்புத் தொகுப்பை** உங்களுக்கு அனுப்புவோம். அதில் உங்கள் கணக்கு விவரங்களும் ,பதிவு செய்தல் **சான்றுக்கான TD போர்ட்டலின் இணைப்பும் இருக்கும்..**



**TD மின்னணுக் கையொப்பம்:**
திட்டத்திற்குத் தேவையான ஆவணங்களை நீங்கள் படித்துப் பார்த்து டிஜிட்டல் முறையில் கையொப்பமிடுவதற்காக அவற்றை உங்களுக்கு அனுப்ப TD மின்னணுக் கையொப்ப சேவை உதவுகிறது. உங்கள் செல்பேசிக்கு அனுப்பப்பட்ட ஒற்றை உபயோகக் கடவுக் குறியீட்டை உள்ளிடுவதன் மூலம், TD மின்னணுக் கையொப்பத் தளத்தில் நுழைய நீங்கள் அங்கீகரிக்கப்படுவீர்கள். ஆவணங்களைப் படித்துப் பார்த்துவிட்டு, அவற்றில் கையொப்பமிடுவது வசதியாகவும், எளிமையாகவும் இருக்கும்.. நீங்கள் கையொப்பமிட்ட ஆவணங்களை எளிதாகப் பெறலாம், அதே சமயம் உங்கள் தகவல்களும் பாதுகாப்பாகவே இருக்கும்.

சிஸ்டம் தேவைகள்:

- மின்னஞ்சல் முகவரி மற்றும் செல்பேசி
- இணைய உலாவி அணுகல் – இண்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் (Internet Explorer) (9,10,11),எட்ஜ் (Edge), குரோம் (Chrome), ஃபயர்ஃபாக்ஸ் (Firefox), சஃபாரி (Safari)
- SMS மூலம் செய்திகளைப் பெறக்கூடிய ஒரு செயலிலுள்ள செல்பேசி சாதனம் (SMS செய்திகளைப் பெற வழக்கமான வயர்லஸ் கேரியர் மெசேஜ் கட்டணமும் டேட்டா கட்டணமும் விதிக்கப்படலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

**TD பாதுகாப்பான மின்னஞ்சல் சேவை**
உங்கள் கணக்கு விவரங்களையும், சர்வதேச வயர் டிரான்ஸ்ஃபர் குறித்த அறிவுறுத்தல்களையும், TD பாதுகாப்பான மின்னஞ்சல் சேவை மூலம் பெறுவீர்கள்.

TD பாதுகாப்பான மின்னஞ்சல் சேவையை அணுக, மின்னஞ்சலில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

- TD சர்வதேச மாணவர் GIC திட்ட விண்ணப்பப் படிவத்தில் வழங்கிய அதே மின்னஞ்சல் முகவரியையே, பதிவு செய்வதற்கும் பயன்படுத்தவும்.
- உங்கள் தனிப்பட்ட தகவல்கள் உட்பட, உங்களுக்கும் TD வங்கிக்கும் இடையேயான தகவல்பரிமாற்றங்கள் அனைத்தும் பாதுகாப்பாக இருப்பதை இந்த சேவை உறுதிசெய்கிறது.

**மாணவர் பதிவு செய்ததற்கான ஆதாரம்**
கணக்கு விவரங்களைப் பெற்றதும், கனடாவில் உள்ள மேல்நிலைக் கல்வி நிறுவனத்தில் படிக்க வழங்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தை நீங்கள் பதிவு செய்ததற்கான ஆதாரத்தை சமர்ப்பிப்பதற்கான TD போர்ட்டலின் மூலம் பதிவேற்ற வேண்டும்.

**customercollaboration.TD.com/student எனும் இணையப் பக்கத்திற்குச் சென்று உங்கள் ஒப்புதல் கடிதத்தைப் பதிவேற்றவும்**

## 3 கணக்கைத் தொடங்குதல்:

எங்களது **TD சர்வதேச மாணவர் GIC திட்டக்** குழுவினர், உங்கள் விண்ணப்பப் படிவத்தையும் தேவையான ஆவணங்களையும் பெற்று சரிபார்த்ததும், உங்கள் **TD மாணவர் காசோலைக் கணக்கு** தொடங்கப்படும். அதன் பிறகு, **TD பாதுகாப்பான மின்னஞ்சல் தளத்தின்** வழியாக உங்களுக்கு உறுதிப்படுத்தும் மின்னஞ்சல் அனுப்பப்படும். அதில் உங்கள் GIC-ஐ வாங்குவதற்கான தொகையை எவ்வாறு வயர் டிரான்ஸ்ஃபர் செய்ய வேண்டும் என்பதற்கான விரிவான அறிவுறுத்தல்கள் இருக்கும்.

**கவனிக்க**: எங்களிடமிருந்து முதல் முறை TD பாதுகாப்பான மின்னஞ்சலைப் பெற்றதும், பாதுகாப்பான மின்னஞ்சல் சேவைக்கு நீங்கள் பதிவுபெற வேண்டும். இந்த மின்னஞ்சல் **14** நாட்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

## 4 பணத்தை டிரான்ஸ்ஃபர் செய்தல்:

உங்கள் நாட்டிலுள்ள நிதி நிறுவனத்திலிருந்து கனடாவிலுள்ள உங்களது TD **மாணவர் காசோலைக் கணக்கிற்கு** குறைந்தபட்சம் **CAD$10,000** முதல் அதிகபட்சம் CAD $25,000 வரையுள்ள தொகையை சர்வதேச வயர் டிரான்ஸ்ஃபர் மூலம் அனுப்பவும்.

## 5 GIC வாங்குதல்:

உங்களுக்கான சர்வதேச வயர் டிரான்ஸ்ஃபரை TD வங்கி பெற்றவுடன், ஒரு **TD சர்வதேச மாணவர் GIC-இல் CAD $10,000** முதலீடு செய்யப்படும். **CAD $10,000-க்கு** மேல் பணம் இருந்தால் அந்தக் கூடுதல் தொகை உங்கள் **TD மாணவர் காசோலைக் கணக்கிலேயே** இருக்கும். **GIC முதலீட்டு விவரங்கள் எனும் ஆவணத்தில்** விவரிக்கப்பட்டுள்ளபடி, GIC வாங்குவதற்கு நீங்கள் ஒப்புதல் அளித்த பிறகு, **TD சர்வதேச மாணவர் GIC** வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து, பாதுகாப்பான மின்னஞ்சல் மூலம் **முதலீட்டை உறுதிப்படுத்தும் ஆவணம்** ஒன்றைப் பெறுவீர்கள். அதில் அசல் தொகை (CAD $10,000), வட்டி வீதம், வழங்கப்பட்ட தேதி, கால அளவு, முதிர்வுத் தேதி உள்ளிட்ட GIC விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

அதன்பிறகு, **முதலீடு செய்ததற்கான ஆதார** ஆவணத்தையும், தேவையான பிற ஆவணங்களையும் வைத்து, **கனடிய அரசாங்கத்தின் ஸ்டூடன்ட் டைரக்ட் ஸ்ட்ரீம் திட்டத்தின்கீழ்**, கனடாவில் படிக்க அனுமதி கோரி நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

**கவனிக்க: முதலீடு செய்ததற்கான உறுதிப்படுத்தலை** வழங்குவதற்கு முன்பு, கையொப்பமிட்ட GIC முதலீட்டு விவரங்கள் படிவம் அவசியம்.

**கவனிக்க:** கனடாவில் வணிக தினமல்லாத நாளில் ஒப்புதல் பெறப்பட்டால், **TD சர்வதேச மாணவர் GIC** அதற்கு அடுத்த வணிக நாளில் வழங்கப்படும்.

## 6 வந்து சேர்ந்த பிறகு கணக்கை செயல்தூண்டுதல் மற்றும் GIC பேமெண்ட்கள்:

கனடாவிற்கு வந்து சேரும்போது, உங்கள் காசோலைக் கணக்கு மற்றும் GIC-ஐ செயல்தூண்டவும், தேவையான ஆவணங்களில் கையொப்பமிடவும், கட்டாயமான அடையாளச் சரிபார்ப்பை நிறைவு செய்வதற்காகவும், ஒரு **TD Canada Trust வங்கிக் கிளைக்கு** வருகை தர நியமச்சந்திப்பு ஒன்றைப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

நியமச்சந்திப்புக்கு வரும்போது, உங்கள் **பாஸ்போர்ட்**, **தகுந்த மேல்நிலைக் கல்வி நிறுவனத்திடமிருந்து** பதிவு செய்ததற்கான ஆதாரம் (அல்லது மாணவர் ID கார்டு), **கனடிய அரசாங்கம் வழங்கிய படிப்புக்கான** அனுமதி ஆகியவற்றைக் கொண்டு வரவேண்டும். கியூபெக் மாகாணத்தில் படிக்கும் மாணவர்களுக்கு, மேலே குறிப்பிட்ட ஆவணங்களுடன் கூடுதலாக **கியூபெக் ஒப்புதல் சான்றிதழும் (CAQ)** அவசியம். உங்களுக்கு **வரி செலுத்துநர் அடையாள எண் (TIN)** இருந்து, முன்பே அதை நீங்கள் வழங்காமல் இருந்தால், வரும்போது அதை வழங்க வேண்டியது கட்டாயம்.

**மாணவர் பதிவு செய்ததற்கான ஆதாரம்**
உங்கள் கணக்கை செயல்தூண்டியதும், கனடாவில் உள்ள மேல்நிலைக் கல்வி நிறுவனத்தில் பதிவு செய்ததற்கான ஆதாரத்தை நீங்கள் பதிவு செய்ததற்கான ஆதாரத்தை,பதிவு செய்தல் சான்றுக்கான TD போர்ட்டலின் மூலம் பதிவேற்ற வேண்டும்.

## பதிவு செய்ததற்கான ஆதாரத்தைப் பதிவேற்ற customercollaboration.TD.com/student என்ற இணையப் பக்கத்திற்குச் செல்லவும் அல்லது 758614 என்ற எண்ணுக்கு STUDENT என SMS அனுப்பவும்.

பதிவு செய்ததற்கான ஆதாரமாக ஏற்கப்படும் ஆவணங்களில் அடங்குபவை:

- தற்போதைய கல்விக் காலத்தில் படித்துவரும் பள்ளியில் கட்டணம் செலுத்தியதற்கான இரசீது அல்லது கணக்கு அறிக்கை
- விரிவான கால அட்டவணை (தற்போதைய அல்லது வரவிருக்கும் கல்விக் காலத்திற்கானது)
- பதிவு அலுவலகத்திடமிருந்து பெற்ற, பதிவைச் சரிபார்க்கும் கடிதம்

மேலே குறிப்பிட்ட படிகளை நிறைவு செய்த பிறகு, உங்கள் GIC முதலீட்டில் இருந்து உங்கள் **TD மாணவர் காசோலைக் கணக்கிற்கு CAD$2,000** தொடக்கத் தொகையும் அதற்குப் பெற்ற வட்டியும் செலுத்தப்படும். மீதமிருக்கும் அசல் தொகை CAD$8,000 உங்கள் **TD மாணவர் காசோலைக் கணக்கில் 10 மாத சம தவணைகளாக**, வட்டியுடன் சேர்த்து அனுப்பப்படும்.



# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## விண்ணப்பம்

**கே. நான் TD மாணவர் காசோலை கூட்டுக்கணக்கைத் தொடங்கலாமா?**

**ப.** கூடாது. **TD சர்வதேச மாணவர் GIC திட்டத்தின்கீழ், ஸ்டூடன்ட் டைரக்ட் ஸ்ட்ரீம் திட்டத்தின்கீழ்** படிக்க அனுமதி கோரி விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரரின் பெயரிலேயே காசோலைக் கணக்கு தொடங்கப்பட வேண்டும்.

**கே. 24 மணிநேரத்திற்கும் மேல் ஆகிவிட்டது, ஆனால் நான் முதலில் சமர்ப்பித்த விண்ணப்பத்திற்கு இன்னும் பதில் வரவில்லை. எனது விண்ணப்பம் பற்றி எப்படி விசாரித்து அறிவது?**

**ப.** முதலில், இந்த மின்னஞ்சல் 'தேவையற்றவை' அல்லது 'ஸ்பேம்' எனக் குறிக்கப்பட்டு அதற்குரிய கோப்புறைகளுக்குச் சென்றுவிட்டதா என்று பார்க்கவும். TD அனுப்பும் மின்னஞ்சல் TD.eSignNoReplyAccount@td.com என்ற முகவரியிலிருந்து வரும்.

### அதன் பிறகும் மின்னஞ்சல் உங்களுக்கு வராவிட்டால் கீழே உள்ள கட்டணமற்ற எண்ணில் அழைத்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்:

**சீனாவில் இருந்து அழைக்க:** 1-855-537-5355
**இந்தியா/பிலிப்பைன்ஸ்/செனேகல்/பாகிஸ்தான்/மொராக்கோ/வியட்னாம்/ஆன்டிகுவா அண்ட் பர்புடா/பிரேசில்/கொலம்பியா, கோஸ்டா ரிகா/பெரு/செயின்ட் வின்சென்ட் அண்ட் தி கிரெநாடின்ஸ்/ட்ரினிடாட் அண்ட் டொபாகோ ஆகிய பகுதிகளில் இருந்து அழைக்க:** 1-416-351-0613 (கால் கலெக்ட்).

**கே. TD மின்னணுக் கையொப்ப தளத்தின் வழியாக எனது விண்ணப்பத்தை நான் பெறவில்லை. நான் மீண்டும் விண்ணப்பிக்கலாமா?**

**ப.** முதலில் இந்த மின்னஞ்சல் 'தேவையற்றவை' அல்லது 'ஸ்பேம்' எனக் குறிக்கப்பட்டு அதற்குரிய கோப்புறைகளுக்குச் சென்றுவிட்டதா என்று பார்க்கவும்.

இரண்டாவதாக, TD வங்கிக்கு வழங்கிய மின்னஞ்சல் முகவரி, நீங்கள் தற்போதைய தகவல்தொடர்பு அனைத்திற்கும் பயன்படுத்துகின்ற அதே மின்னஞ்சல் முகவரிதானா என்று உறுதிப்படுத்திக்கொள்ளவும். நீங்கள் தவறான மின்னஞ்சல் முகவரியை வழங்கியிருந்தால், <<LINK>> மூலம் விண்ணப்பப் படிவத்திற்கான கோரிக்கையை மீண்டும் சமர்ப்பிக்கவும்.

**கே.** **TD மின்னணுக் கையொப்ப தளத்தில் உள்நுழைவதற்கான SMS செய்தி எனக்கு வரவில்லை. SMS செய்தியை எப்படி மீண்டும் வரவழைப்பது?**

**ப.** மின்னஞ்சலில் **"Go to Documents"** என்பதை நீங்கள் கிளிக் செய்ததும், உங்களுக்கு ஒரு SMS வரும். அது 5 நிமிடங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஒருவேளை உங்களுக்கு SMS வராவிட்டால், மீண்டும் செய்தியை வரவழைக்க, **TD மின்னணுக் கையொப்பச் சேவையின் உள்நுழைவுப்** பக்கத்தில் உள்ள **"Click Here"** **என்ற பட்டனைக் கிளிக் செய்யவும்.**




**கே.** **அதிகபட்சம் எத்தனை முறை ஒற்றை உபயோக கடவுக்குறியீட்டை (OTP) உள்ளிடலாம்?**

**ப.** தவறான SMS கடவுச்சொல்லை **மூன்று முறை உள்ளிட்டு முயற்சித்தபிறகு**, உங்கள் விண்ணப்பப் படிவம் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களுக்கான அணுகல் மூடப்பட்டுவிடும். இது குறித்து நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை. உங்கள் அணுகல் மூடப்பட்டதும் தானாகவே எங்களுக்கு அறிவிப்பு வரும். TD மின்னணுக் கையொப்ப சேவையில் இருந்து, உங்கள் அணுகல் மூட்டப்பட்டது என்பதைத் தெரிவிக்கும் அறிவிப்பு எங்களுக்கு வந்ததும், அதை நாங்கள் மீண்டும் இயக்குவோம், அதற்கான அறிவிப்பு உங்களுக்கு வரும்.

உங்கள் அணுகலை மீண்டும் பெற, 24 - 48 மணிநேரம் வரை ஆகலாம், சற்று காத்திருக்கவும்.

**கே.** **TD கனடா ட்ரஸ்ட் வரி வசிப்பிட சுய சான்றிதழ் - தனிநபர் என்பதில் எனது வரி செலுத்துநர் அடையாள எண்ணை (TIN) நான் ஏன் வழங்க வேண்டும்?**

**ப.** கனடிய வருமான வரிச் சட்டத்திற்கு இணங்குவதற்காக, உங்கள் வரி வசிப்பிடம் பற்றிய தகவலை நாங்கள் சேகரிக்க வேண்டும் என கனடிய வருமான ஏஜென்சியால் அவசியமாக்கப்பட்டுள்ளது.  உங்களுக்கு **வரி செலுத்துநர் அடையாள எண் (TIN)** இருந்தால், விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்கும்போது அல்லது அடுத்த **30 நாட்களுக்குள்** அதை வழங்க வேண்டியது கட்டாயம். இந்தத் தகவலை எங்கள் பதிவுகளில் வைத்திருக்காவிட்டால், கனடிய வருவாய் ஏஜென்சி உங்களுக்கு அபராதங்கள் விதிக்கலாம்.

உங்கள் வரி வசிப்பிடத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், மாற்றம் நடந்து **30 நாட்களுக்குள்** மேலே கொடுக்கப்பட்டுள்ள கட்டணமற்ற எண்களில் எங்களை அழைத்துத் தெரிவிக்கவும். ஒருவேளை எங்களுக்கு, மேலும் தகவல் தேவைப்பட்டால், மேற்கொண்டு உங்களைத் தொடர்புகொள்வோம்.



## உங்கள் TD GIC

**கே. TD சர்வதேச மாணவர் GIC-இல் முதலீடு செய்யும் CAD$10,000-க்கு எனக்கு வட்டி கிடைக்குமா?**

**ப.** ஆம், GIC **முதலீட்டை உறுதிப்படுத்தும் ஆவணத்தில்** குறிப்பிட்டுள்ளபடி, நீங்கள் முதலீடு செய்யும் தொகைக்கு உங்களுக்கு வட்டி கிடைக்கும். GIC-க்கான தற்போதைய வட்டிவீதத்தை **GIC வட்டி வீதங்கள்** எனும் பக்கத்தில் பார்க்கலாம்.

## வயர் டிரான்ஸ்ஃபர் குறித்த அறிவுறுத்தல்கள்

**கே. மாணவர் அல்லாமல் வேறு யாராவது கூட வயர் டிரான்ஸ்ஃபர் செய்யலாமா?**

**ப.** செய்யலாம். மாணவர் தனது நாட்டிலுள்ள அவரது வங்கிக் கணக்கில் இருந்து பணம் அனுப்பலாம் (அல்லது அவரது நாட்டிலுள்ள அவரது குடும்பத்தினர்/நண்பர்களின் கணக்கில் இருந்தும் அனுப்பலாம்).

## கனடா வருவதைத் தள்ளிப்போடுதல் மற்றும் நீங்கள் படிக்கவுள்ள கல்வி நிறுவனத்தை மாற்றுதல்

**கே. என்னுடைய பதிவுசெய்தலை நான் தள்ளிப்போட்டுள்ளேன் அல்லது நான் படிக்கப்போகும் கல்வி நிறுவனத்தை மாற்றிவிட்டேன். அப்போதும் எனது படிப்புக்கான அனுமதிக்காக நான் அதே GIC-ஐப் பயன்படுத்தலாமா?**

**ப.** TD மாணவர் காசோலைக் கணக்கைத் தொடங்கிய **365 நாட்களுக்குள்** உங்களால் ஒரு **TD கனடா ட்ரஸ்ட் வங்கிக் கிளையில்** அடையாளச் சரிபார்ப்புச் செயல்முறையை நிறைவு செய்ய முடியுமெனில், அதே **TD சர்வதேச மாணவர் GIC**-ஐப் பயன்படுத்தி, எதிர்காலத்தில் கல்வித் திட்டத்தில் சேர்வதற்காக, நீங்கள் படிப்புக்கான அனுமதி கேட்டு விண்ணப்பிக்கலாம். காசோலைக் கணக்கைத் தொடங்கிய **365 நாட்களுக்குள்** எங்கள் திட்டத்திற்கான தேவைகளை நிறைவு செய்யாவிட்டால்,**TD மாணவர் காசோலைக் கணக்கு**, **GIC கணக்கு** ஆகிய இரண்டும் மூடப்படும், அதிலுள்ள பணம் எந்தக் கணக்கிலிருந்து வந்ததோ அதே கணக்கிற்கு மீண்டும் அனுப்பப்படும்.

உங்கள் **TD மாணவர் காசோலைக் கணக்கு** தொடர்ந்து இயக்கத்தில் இருக்க வேண்டுமானால், கணக்கைத் தொடங்கியதிலிருந்து 90 நாட்களுக்குள் ஒரு சர்வதேச வயர் டிரான்ஸ்ஃபர் மூலம் அதில் பணம் செலுத்த வேண்டியது கட்டாயம். 90 நாட்களுக்குள் பணம் செலுத்தப்படாமல் இருக்கும் கணக்குகள் தானாகவே மூடப்பட்டுவிடும்.